2010 ஏப்ரல் 15] [திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]

Tamil Nadu Civil Supplies Corporation-ல் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் மட்டும் வழங்கப்படவில்லை. கடந்த 2009 ஆம் ஆண்டில் தமிழக அரசு உணவு மானியக் கோரிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் பதிலளிக்கும்போது, இந்த அரசு பென்ஷன் வழங்கவில்லை என்றால், எந்த அரசும் வழங்க முடியாது என்று சொன்னார்கள். அதை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜேக்கப், உரையாற்றியது போதும். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் ஆகியோர் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 16-4-2010, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. நாளை (16-4-2010) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (16-4-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

37. மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

39. மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

40. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

41. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

42. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

— — — — — —